பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
16 05 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைப்பதற்காக அனைத்து கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரை பல்வேறு நாடுகளுக்கு அனுப்ப மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
2. ஆப்பரேஷன் சிந்தூர் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அரசியல் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
3. எஃகு துறையின் புதிய இணையதள சேவையை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. எச்டி. குமாரசாமி இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
4. ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பேச்சுக்கள் துருக்கியில் இன்று நடைபெற்றன.
5. ஃபிரான்ஸ் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<

பாகிஸ்தானுக்கு ஆதரவான தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைப்பதற்காக அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரை பல்வேறு நாடுகளுக்கு அனுப்ப மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தக் குழுவில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

அடுத்த வாரம் முதல் இந்த குழுவினர் தங்களது பயணத்தை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அரசியல் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி பாதுகாப்புப் படையினருக்கு முழுசுதந்திரம் வழங்கியதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக, முப்படைகளும் தங்களது திறனை முழுமையாக வெளிப்படுத்தியதாகவும், இது வெற்றியை தேடித்தந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>><<<<<

தீவிரவாத கட்டமைப்புகளை அகற்றி, தீவிரவாதிகளை ஒப்படைத்தால் தான் பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியும் என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதிகளுக்கு புகலிடமாக பாகிஸ்தான் திகழ்வதாக குற்றம் சாட்டினார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதியிலிருந்து அந்நாடு வெளியேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதிகளுக்கு உரிய பதிலடி கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாடுமுழுவதும் பேரணிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஹைதராபாதில் நாளை இதற்கான பேரணி நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முப்படைகளின் வலிமையை போற்றும் வகையில் இந்த பேரணிகள் நடத்தப்படுவதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

**>>>>>><<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் இந்தியாவுக்கு மிகப் பெரிய வெற்றியை தேடித்தந்துள்ளதாக ஆஸ்திரியாவைச் சேர்ந்த ராணுவ நடவடிக்கைகளுக்கான நிபுணர் திரு. **Tom Cooper** கூறியுள்ளார்.

பிரஸார் பாரதிக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இதில் பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் தீவிரவாத கட்டமைப்புகள் அழிக்கப்பட்டதாக கூறினார்.

இந்தியா, துல்லியமாக தாக்குதலை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவை குறிவைத்து பாகிஸ்தான் படையினர் நடத்திய வான்வழி தாக்குதல்களையும், இந்திய படையினர் வெற்றிகரமாக முறியடித்ததாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக பாகிஸ்தானில் உள்ள விமானதளங்கள் சேதமடைந்ததாகவும் திரு. **Tom Cooper** தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள், ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இதில் ஆகாஷ் தீர் ஆற்றிய பங்களிப்பு இன்றியமையாதது என்று ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி கர்னல் கணேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – கணேசன் 78 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<**

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இலக்கியத் துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான ஞானபீட விருதுகளை இன்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமஸ்கிருத அறிஞர் திரு. **Jagad Guru Rambhadracharya**-ம், உருதுக் கவிஞர் **Gulzar-**ம் இந்த விருதை பெற்றுக் கொண்டனர்.

2023ஆம் ஆண்டிற்கான இந்த விருதை தாம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்றும், தங்களது படைப்புகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என்றும் விருதை பெற்றவர்கள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<

எஃகு துறையின் புதிய இணையதள சேவையை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. எச்டி. குமாரசாமி இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அமைச்சர், எஃகு துறையைச் சேர்ந்த அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் இந்த மாற்றியமைக்கப்பட் இணையதள சேவை தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த இணையதள சேவையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் குறித்தும் திரு. குமாரசாமி இதில் எடுத்துரைத்துள்ளார்.

>>>>>><<<<<

அஸ்ஸாம் உள்ளாட்சித் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெரிய அளவில் வெற்றியை ஈட்டித் தந்த வாக்காளர்களக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

கவுஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வாஸ் சர்மா மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளதாக கூறினார்.

இதன் காரணமாகத்தான் உள்ளாட்சித் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்துள்ளதாக திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

புல்வாமா மற்றும் குல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவிரவாதிகள் பதுங்கியிருக்கக்கூடும் என்ற உளவுத் தகவலை அடுத்து, சம்பந்தப்பட்ட பகுதிகளை பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகவும், அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

>>>>>><<<<<

தமிழகத்தின், கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ள நிலையில், அப்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்த கேரளாவைச் சேர்ந்த மீனவர்கள் 16 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மீன்கள் ஏலத்தில் விடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 46 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பேச்சுக்கள் துருக்கியில் இன்று நடைபெற்றன.

இஸ்தான்புல்லில் நடைபெற்ற இந்த பேச்சுக்களில் இருநாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இரு நாடுகளும் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<**

ஃபிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-11, 21-16 என்ற செட்கணக்கில் ஃபிரான்ஸின் **Qi Xuefei-**யை வென்றார்.

**>>>>>><<<<<**

ஆசிய மகளிர் பீச் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

மஸ்கட்டில் நடைபெற்ற இப்போட்டியின் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**>>>>>><<<<<**

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா முதலிடத்தில் நீடிக்கிறார்.

**>>>>>><<<<<**

புரோ கபடி லீக் போட்டிக்கான வீரர்கள் ஏலம் வரும் 31ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மாலத்தீவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி அருணாச்சலப்பிரதேசத்தின் **Yupia-**வில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**>>>>>>END<<<<<**